நவராத்திரி கொலு படி பாட்டு

*********************************

பாடலாசிரியர்:ஸ்ரீதேவிபிரசாத்

***********

மண்ணால் செய்த பொம்மைகளை

இந்நாள் வைத்து பூஜித்தால்..

அம்பாள் வந்து அருள்வாளே...!

ஐஸ்வர்யங்களும் தருவாளே ! (2)

கோரஸ்:

துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி-திரு

அருள் மிகும் ஒன்பது ராத்திரி ! (2)

சரணம் - 1

--------------

ஒன்றாம் கொலுப்படி வைப்போம் செடி,கொடி

ஓரறிவுள்ள உயிர்களையே ! (2)

இரண்டாம் படியினில் ஈரறி வுயிர்கள்

நத்தை, சங்கு...இதுபோலே...

மூன்றாம் படியினில்...கரையான், எறும்பு..

நான்காம் படியினில் நண்டு, வண்டு (2)

ஐந்தாம் படியினில் பறவை, மிருகம்...

அமைத்தே நாமும் வணங்கிடுவோம் !

கோரஸ்:

துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி-திரு

அருள் மிகும் ஒன்பது ராத்திரி ! (2)

PSDPrasad Music

நவராத்திரி கொலு படி பாட்டு

********************************

பாடலாசிரியர்:ஸ்ரீதேவிபிரசாத்

***********

சரணம் - 2

--------------

ஆறாம் கொலுப்படி...மனிதரின் பொம்மை..

ஆறாம் அறிவே நம்பெருமை ! (2)

ஏழாம் படியினில் ரிஷிகளின் உருவம்

ரமணர் போன்ற குரு வடிவம் !

எட்டாம் படியில் தேவரை வைப்போம்

எட்டா வளங்களும் அடைந்திடுவோம் ! (2)

ஒன்பதாம் படியில் முப்பெருந்தேவியர்

மும்மூர்த்தியுடனே அமர்வாரே !

(மண்ணால் செய்த)

PSDPrasad Music